தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

ஆணை நாள் 03.06.2026

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 1268/B/2023**

திரு.K.P.காந்தி — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
வேளாண்மை உதவி இயக்குநர்,
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,
காணை,
விழுப்புரம் மாவட்டம் - 605 602. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (03.06.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.K.P.காந்தி அவர்கள் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திருமதி.ஆ.இந்துமதி, வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், காணை, விழுப்புரம் மாவட்டம், அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 23.01.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (03.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 21.11.2022 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், விக்கிரவாண்டி வட்டம், காணை ஊராட்சி ஒன்றியம், கடையம் ஊராட்சிக்கு ஒருங்கிணைந்த வேளாண் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு செய்யவேண்டிய பணிகளின் விவரம் மற்றும் ஊராட்சிமன்ற தலைவரின் பங்களிப்பு குறித்த விவரம் உள்ளிட்ட 6 இனங்களில் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 22.12.2022 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டம் தொடர்பாக கோரிய தகவல்கள் 07.02.2023ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக பதிவுத் தபால் மூலம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். மனுதாரர் இன்றைய

விசாரணையில் ஆஜராகி அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து அவரது கருத்தினை தெரிவிக்கத் தவறியுள்ளார்.

4. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**
**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 1268/B/2023**
**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்,
வேளாண்மை உதவி இயக்குநர்,
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,
காணை,
விழுப்புரம் மாவட்டம் - 605 602.

திரு.K.P.காந்தி,
த/பெ.பாண்டுரங்கன்,
கிழக்கு தெரு, கடையம் கிராமம்,
நல்லாப்பாளையம் அஞ்சல்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 605 701.

Copy to: File
Sj/Ps- 12/06/2026